**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 109/2020 |
| Name | : Rajaganesh |
| P.W. | : 6 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.01.2026

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருச்சி மாநகர இடைமலைப்பட்டிபுதூர்காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.07.2019 ம் தேதி நான் கணியூர் காவல் நிலை உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது சிவக்குமார் த/பெ.சுப்பிரமணியம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று கணியூர் காவல் நிலைய குற்ற எண். 140/2019 இதச பிரிவுகள் 279, 304(A) ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அசல் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை இணைத்து உடுமலை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 க்கும் அதன் ஒரு நகலை புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) அ.சா.1 புகாரில் சிவக்குமார் நானும், எனது உறவினர் பசுபதிராஜும் நின்று பேசிக் கொண்டிருந்தோம் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். எந்த இடத்தில் நின்று

பேசிக்கொண்டிருந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. தனியாக நான், இடம் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி எதிரி வந்ததாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாகன விபத்து இழப்பீடு பெற வேண்டி கொடுக்கப்பட்ட பொய்யான புகாரைப் பெற்று சரிவர விசாரிக்காமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.01.27 12:49:32 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்